மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (14–5–2010) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14–5–2010) வெள்ளிக்கிழமை, காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

90. காஞ்சிபுரம் மாவட்டம், சிறுதாவூர் கிராம ஏழை ஆதி திராவிடர் நிலங்கள் அபகரிப்பு செய்யப்பட்டதால் ஏற்பட்ட சூழ்நிலைகள் மற்றும் காரணங்கள் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப் பெற்ற நீதியரசர் திரு கே.பி. சிவசுப்பிரமணியம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

91. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் விதிகள் இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன்காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

92. 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ்

பராமரிப்புக்குரிய ஆணையை, முடிவு செய்யும் செயல் நோக்கத்திற்காக ஒவ்வொரு துணைக் கோட்டத்திலும் ஒரு தீர்ப்பாயத்தை அமைத்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

93. 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின்கீழ் தீர்ப்பாயம் பிறப்பித்துள்ள ஆணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டினை விசாரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்றினை நியமித்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 172 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

94. 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட சமூக நல அலுவலரைப் பராமரிப்பு அலுவலராக நியமித்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

232. 2008–2009 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை – ஆண்டுக் கணக்குகள். (தமிழ், ஆங்கிலம்)

233. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)